# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2013–2014

## மானியக் கோரிக்கை எண்.31

**முக்கூர் என். சுப்பிரமணியன்**
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2013

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# கொள்கை விளக்கக் குறிப்பு 2013–2014

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–4 |
| II. | தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) | 5 |
| | எல்கோசெஸ் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | 6–16 |
| | வன்பொருள் கொள்முதல் | 16–17 |
| | மென்பொருள் உருவாக்கம் | 17–18 |
| | மடிக்கணினி வழங்கும் திட்டம் | 18–19 |
| III. | தகவல் தொழில் நுட்ப உள்கட்டமைப்பு | 20 |
| | தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு | 20–23 |
| | தமிழ்நாடு மாநில தரவு மையம் | 23–25 |
| | தேசிய அறிவுத் தள வலையமைப்பு | 25–26 |

| | | |
|---|---|---|
| | தரவு பேரிடர் மீட்பு மையம் | 27 |
| IV. | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை | 28 |
| | மின் மாவட்ட திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துதல் | 29–33 |
| | மாவட்ட மின் ஆளுமை சங்கம் | 33 |
| | பொதுச் சேவை மையங்கள் | 34 |
| | நகர்ப்புற பொதுச் சேவை மையங்கள் | 34–35 |
| | மாநில சேவை இணையதளம் | 35 |
| | வெப் ரத்னா விருது | 35–36 |
| | திறன் மேம்பாடு | 36–37 |
| | மாநில மின் குறிக்கோள் குழு | 38 |
| | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு | 38–39 |
| V. | மின் ஆளுமை முயற்சிகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பங்கு | 40 |
| | மின்ஆளுமைக்கான அரசு துறைகளுக்கான முதலமைச்சரின் உயரிய விருதுகள் | 40 |
| | மின்ஆளுமைக்கான மாணவர்களுக்கான முதலமைச்சரின் உயரிய விருதுகள் | 40–41 |
| | மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுக்கு உதவுதல் | 41–49 |
| | சேவை விளக்கக் கோப்பகம் | 49–50 |
| | திட்ட கண்காணிப்பு மென்பொருள் | 50–51 |
| | தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை | 51–52 |
| | அரசு ஊழியர்களுக்கு இணையதளம் வாயிலாக பாடங்கள் | 52–53 |
| | துறைகளின் பயன்பாடுகளை மறு வடிவமைத்தல் | 53–54 |
| | மின் ஆளுமை கருத்தரங்குகள் | 54–55 |
| | மின்ஆளுமை விழிப்புணர்வு முகாம் | 55–56 |
| | பொது மக்கள் தொடர்பு மையம் | 56–57 |
| VI. | தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் | 58–62 |
| VII. | தமிழ் இணையக் கல்விக்கழகம் | 63–68 |
| VIII. | தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட் | 69–76 |
| IX. | 2013–2014 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் | 77–79 |

## அத்தியாயம் – I

# முன்னுரை

இந்தியாவிலேயே தமிழகத்தை வறுமை இல்லாத வளமான மாநிலமாக மாற்றிடவும், மக்கள் நவீன சமுதாயத்தில் அனைத்து அடிப்படை வசதிகளுடனும், சுற்றுசூழல் மற்றும் உலகத்துடன் இணக்கமாக வாழும் சூழலை உருவாக்கும் வகையிலும் அமையப்பெற்றது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு பார்வையாகும்.

தமிழ்நாடு இந்தியாவில் ஒரு முன்னோடி அறிவுசார் மாநிலமாகத் திகழ்கிறது. மனிதவள சக்திகள் தமிழ்நாட்டில் மிகச்சிறந்த அளவில் புதிய தொழில்நுட்பத் துறைக்கு தகுந்தவாறு அமைந்துள்ளது. தமிழ்நாடு ஆண்டுதோறும் சுமார் 1,92,000 பொறியியல் பட்டதாரிகளையும், அதற்கு இணையான பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களையும் உருவாக்குகிறது. இதனால், தமிழ்நாட்டில் அறிவு சார்ந்த தொழிற்சாலைகளுக்கும் பணிகளுக்கும் மிகுந்த வாய்ப்பு இருக்கிறது.



தகவல் தொழில்நுட்பத்துறை, தமிழ்நாடு ஒரு புதிய நவீன பொருளாதார நிலையை அடைய உதவியுள்ளது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பணி பிரிவுகளான வங்கித்துறை, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு, சுகாதாரத்திட்ட மேலாண்மை, கணினி உதவியுடன் வடிவமைத்தல் மற்றும் கணினி உதவியுடன் பொறியியல் துறை ஆகியவற்றில் தமிழ்நாடு ஓர் தலைசிறந்த முன்னோடியாகவும் மற்றும் உலகளாவிய தலைமை இடமாகவும் உருவெடுத்துள்ளது.

### தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் குறிக்கோள்கள் பின்வருமாறு:–

1. மிக விரைவாக குடிமக்களுக்கு அரசின் தகவல்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றை இணையம் வாயிலாக அவர்கள் இருப்பிடத்திலேயே வழங்குதல்;
2. கிராமம் மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புதல்;
3. தமிழ்நாட்டை, தகவல் தொழில்நுட்பத்திலான மின் ஆளுமையில் சிறந்த மாநிலமாக மாற்றுதல்;

4. தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை கணிசமான அளவுக்கு உயர்த்துதல்;

5. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கம்பிவட தொலைக்காட்சி சேவைகளை நியாயமான கட்டணத்தில் வழங்குதல்;

6. இணையம் வாயிலாக தமிழை கற்பித்தல் மற்றும் கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுதல்;

7. குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்துதல்;

மேற்காணும் குறிக்கோள்களில் ஒன்றான அரசின் சேவைகளை மக்களின் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே அளித்திடும் வகையில் சேவை முறையில் தகவல் தொழில்நுட்ப உத்திகளை புகுத்திட அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. மேற்கண்ட முயற்சிகளை நிறைவேற்றிடும் வகையில் ஒரு மின் ஆளுமை கொள்கை விரைவில் வெளியிடப்படும். தகவல் தொழில் நுட்ப புரட்சியை அடுத்த நிலைக்கு கொண்டுசெல்ல தகவல் தொலைத்தொடர்பு கொள்கை ஒன்றும் விரைவில் வெளியிடப்படும். மேம்படுத்தப்பட்ட ஊரக



வெளிப் பணிக் கொள்கை ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஜூலை 2012–ல் வெளியிடப்பட்டுள்ளது. இக்கொள்கையில் ஊரக வெளிப் பணி நிறுவனங்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் ஊரக வெளிப் பணி நிறுவனங்கள் பெரும் வளர்ச்சி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் மிகப்பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தி கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏறத்தாழ 1780 நிறுவனங்களில் 3,75,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். தமிழகத்தில் 2012–13–க்கான மென்பொருள் ஏற்றுமதி ரூ.50,000 கோடி அளவில் 10 சதவீதம் வளர்ச்சிக்கு மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புத்துயிரூட்டப்பட்டு, அதன் சேவைகள் 2.9.2011 முதல் அனைத்து மக்களுக்கும் மாதச் சந்தா ரூ.70/– என்ற நியாயமான கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகளை மேம்படுத்தி வழங்கிட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

## அத்தியாயம் – II

# தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான இந்திய நிறுவனங்கள் சட்டம் **1956**ன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு தொழில் நிறுவனமாகும். தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் அரசுத் துறைகள், அரசு மற்றும் அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கும், இதர அரசு வாரியங்களுக்கும் தகவல் தொழில்நுட்பவியல், மின் ஆளுமை, திறன் கட்டமைப்பு வழங்குதல் போன்ற பணிகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டி வருகிறது.

மேலும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வன்பொருள் கொள்முதல் மற்றும் மென்பொருள் உருவாக்குதல் ஆகிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) போன்ற பெரிய தகவல் தொழில் நுட்பவியல் திட்டங்களை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கி மற்றும் செயல்படுத்தி வருகிறது.



தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மடிக்கணினிகளை கொள்முதல் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது. தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்குவதில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் முன்னோடியாகத் திகழ்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை "எல்கோசெஸ் (ELCOSEZ)" என்ற முத்திரைப் பெயராக அறிவித்ததன் மூலம் அவற்றை தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் அது சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் முதலீடுகளுக்கான 'சிறந்த உகந்த தேர்வாக' உருவாக்கப்படுவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் இந்த எல்கோசெஸ் (ELCOSEZ) குறிப்பிடத்தக்க முதலீடுகளை ஈர்க்கத் தொடங்கியுள்ளது.

## <u>தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்கள்)</u>

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் தொழில்

தமிழ்நாடு முழுவதும் பரவி வளர தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் எட்டு எல்கோசெஸ்களை சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (2), திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் ஆகிய ஏழு இடங்களில் அமைத்துள்ளது.

## எல்கோசெஸ்–சோழிங்கநல்லூர், சென்னை

சோழிங்கநல்லூரில் எல்கோசெஸ் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு சுமார் ரூ. 194 கோடி ஆகும். இந்த எல்கோசெஸ்சில் முதன்மை வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களான திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்திற்கு 80 ஏக்கரும், திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனத்திற்கு 50 ஏக்கரும், திருவாளர்கள் சத்யம் நிறுவனத்திற்கு 50 ஏக்கரும், திருவாளர்கள் சதர்லேண்ட் நிறுவனத்திற்கு 15 ஏக்கரும் மற்றும் திருவாளர்கள் காக்னிசன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 20 ஏக்கரும் முறையே குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இந்த எல்கோசெஸ்சில் திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் 27 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 19,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனம் 10 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 10,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. மேலும் 22 இலட்சம் சதுரடியில் கட்டட பணிகள் நடைபெற்று வருகிறது. திருவாளர்கள் சத்யம் நிறுவனம் 6.25 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தைக் கட்டி முடித்து அதில் 4,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. இந்த எல்கோசெஸ்சில் திருவாளர்கள் காக்னிசென்ட் டெக்னாலஜி சொலுசன்ஸ் நிறுவனம் 28 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தைக் கட்டத் தொடங்கி பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த எல்கோசெஸ்சில் ரூ.42 கோடி மதிப்பீட்டில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் நிறைவு பெற்றுள்ளது. இந்த எல்கோசெஸில் 6358 சதுரடி கொண்ட நிர்வாக கட்டடம் ரூ. 126 இலட்சம் முதலீட்டில் கட்டப்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 15.10.2012 அன்று திறந்து வைக்கப்பட்டது.

## எல்கோசெஸ்–விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

கோயம்புத்தூர் விளாங்குறிச்சியில் எல்கோசெஸ் 62 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.70 கோடி ஆகும். இந்த எல்கோசெஸ்சில் இரு நிறுவனங்களான திருவாளர்கள் விப்ரோ மற்றும் திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் நிறுவனங்களுக்கு தலா 9.5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் 3.5 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தை கட்டும் பணியை தொடங்கி அதில் 90 சதவீதம் வரை முடிவுபெற்றுள்ளது. திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட். 17 இலட்சம் சதுர அடியில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது. இந்த 17 இலட்சம் சதுர அடியில் 9 இலட்சம் சதுர அடி தகவல் தொழில்நுட்பவியல் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 4.56 இலட்சம் சதுரடியில் 11 தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் அமைந்துள்ளன. இந்த எல்கோசெஸ்சில் பொது கட்டமைப்பு வசதிகள் ரூ.19 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.



## எல்கோசெஸ்–இலந்தைகுளம் மற்றும் வடபழஞ்சி, மதுரை

மதுரை இலந்தைக்குளம் கிராமத்தில் 28.91 ஏக்கர் நிலமும் வடபழஞ்சி கிராமத்தில் 245.17 ஏக்கர் நிலமும் எல்கோசெஸ் உருவாக்க, தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

**இலந்தைகுளம் எல்கோசெஸ்சில்** தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.32 கோடியாகும். இதில் 50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக கட்டடம் ரூ. 17 கோடி மதிப்பீட்டு செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் பொது கட்டமைப்பு வசதிகள் ரூ.7 கோடி மதிப்பீட்டு செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் 4.5 ஏக்கர் நிலம் திருவாளர் ஹனிவெல் டெக்னாலஜீஸ் நிறுவனத்திற்கும், 2.25 ஏக்கர் நிலம் திருவாளர் செல்லா சாப்ட்வேர் நிறுவனத்திற்கும் குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வடபழஞ்சி எல்கோசெஸ்சில்** பொது உட்கட்டமைப்பு வசதிகள் ரூ. 14 கோடி முதலீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த

முதலீடு ரூ.45 கோடியாகும். இந்த எல்கோசெஸ்சில் 60 ஏக்கர் நிலம் திருவாளர் எச்.சி.எல் (HCL) நிறுவனத்திற்கும், 50 ஏக்கர் நிலம் திருவாளர் சத்யம் நிறுவனத்திற்கும், 5 ஏக்கர் நிலம் திருவாளர் சதர்லேண்ட் நிறுவனத்திற்கும், 5 ஏக்கர் நிலம் திருவாளர் காலிபர் பாயிண்ட் நிறுவனத்திற்கும் மற்றும் 2 ஏக்கர் நிலம் திருவாளர் ஹெல்த் பிளான் சிஸ்டம் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## எல்கோசெஸ்–நவல்பட்டு, திருச்சி

திருச்சியில் நவல்பட்டு கிராமத்தில் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் எல்கோசெஸ் நிறுவப்பட்டுள்ளது. இதில் 123.23 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து பெறப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ. 60 கோடியாகும்.

இந்த எல்கோசெஸில் பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன:–



1. திருவாளர்கள் அசிஸ்ட் இண்டர்நேஷனல் பி.லிட். – 3 ஏக்கர்
2. திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பி.லிட் – 2 ஏக்கர்
3. திருவாளர்கள் ஐ.வேவ் சிஸ்டம்ஸ் டெக்னாலஜீஸ் பி.லிட் – 5 ஏக்கர்
4. திருவாளர்கள் அன்லிமிடெட் இனொவேஷன்ஸ் இந்தியா பி.லிட் – 5 ஏக்கர்
5. திருவாளர்கள் ஜைலாக் சிஸ்டம்ஸ் லிட் – 5 ஏக்கர்
6. திருவாளர்கள் ஐ லிங்க் பி.லிட் – 2 ஏக்கர்
7. திருவாளர்கள் டபிள்யு என்.எஸ் பி.லிட் – 5 ஏக்கர்

இந்த எல்கோசெஸ்சில் பொது கட்டமைப்பு வசதிகள் ரூ.14.21 கோடி மதிப்பீட்டு செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இதில் 50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் ரூ.19 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தில் 9,200 சதுர அடி இடம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களான திருவாளர்கள் ஐ லிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் திருவாளர்கள் அசிஸ்ட் இன்பர்மேஷன் டெக்னாலஜீஸ் லிமிடெட் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு

அவர்கள் பணிகளை துவக்கியுள்ளனர். மேலும் திருவாளர் செவன்த் சென்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 2000 சதுர அடி இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## எல்கோசெஸ்–கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலியில் கங்கைகொண்டான் கிராமத்தில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் எல்கோசெஸ் நிறுவப்பட்டுள்ளது. இதில் 190 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து பெறப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ. 50 கோடியாகும்.

இந்த எல்கோசெஸ்சில் 100 ஏக்கர் நிலம் திருவாளர் சின்டெல் இன்டர்நேஷனல் நிறுவனத்திற்கும், 2 ஏக்கர் நிலம் திருவாளர் டெக்கான் ஐ சர்வீசஸ் நிறுவனத்திற்கும் சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதியில் குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 25 ஏக்கர் நிலப்பரப்பளவு நிலம் திருவாளர் ஏ அன்ட் டி காஸ்மிக் பவர் நிறுவனத்திற்கு சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத இடத்தில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் பொது கட்டமைப்பு வசதிகள் 100 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு ரூ.13 கோடி மதிப்பீட்டு செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில்



50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் கட்டடம் ரூ.16 கோடி மதிப்பீட்டு செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் தொழில் நுட்பவியல் கட்டடத்தில் 9000 சதுர அடி இடம் திருவாளர் கோம் சாஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## எல்கோசெஸ்–ஜாகீர்அம்மாபாளையம், சேலம்

சேலம் – ஜாகீர்அம்மாபாளையம் கிராமத்தில் 164.26 ஏக்கர் நிலப்பரப்பளவில் எல்கோசெஸ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ. 33 கோடியாகும்.

பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு இந்த எல்கோசெஸ்சில் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவாளர்கள்

1. டி.பி. பிரொபஷனல் பி.லிட் – 3 ஏக்கர்
2. வீ டெக்னாலஜீஸ் பி.லிட் – 3 ஏக்கர்
3. மகிமா டெக்னாலஜீஸ் பி.லிட் – 3 ஏக்கர்
4. ஜி.டி.பி இன்போடெக் சொலுஷன்ஸ் பி.லிட் – 2.5 ஏக்கர்

இந்த எல்கோசெஸ்சில் 53.33 ஏக்கர் பரப்பளவிற்கான பொது கட்டமைப்பு வசதிகள் உருவாக்கும் பணி ரூ. 10 கோடி மதிப்பீட்டு செலவில் நடைபெற்று வருகிறது.

## எல்கோசெஸ்–விஸ்வநாதபுரம், ஒசூர்

ஒசூர்–விஸ்வநாதபுரம் கிராமத்தில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பளவில் எல்கோசெஸ் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ. 40 கோடியாகும். பின்வரும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு இந்த எல்கோசெஸ்சில் குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவாளர்கள்

1) ஒகாயா இன்போகாம் பி.லிட் – 10 ஏக்கர்

2) சி.ஆர்.எம். ஐ.டி.சொலுஷன்ஸ் பி.லிட் – 3 ஏக்கர்

3) சி.ஆர்.எம் இன்போடெக் இந்தியா பி.லிட் – 2 ஏக்கர்

இந்த எல்கோசெஸ்சில் தேவையான பொது கட்டமைப்பு வசதிகள் ரூ.24 கோடி மதிப்பீட்டு செலவில் நடைபெற்று வருகிறது. இந்த எல்கோசெஸ்சில் 50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் கட்டடப் பணி ரூ.15 கோடி மதிப்பீட்டு செலவில் நடைபெற்று வருகின்றது.



## வேலூர் மற்றும் விழுப்புரம்

வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தகவல் தொழில் நுட்பவியல் எல்கோசெஸ்கள் அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் வேலூரில் அதற்கான சாத்திய கூறுகளை கண்டறிய ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## வன்பொருள் கொள்முதல்

அரசுத் துறைகளுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வன் பொருள்களைக் கொள்முதல் செய்யவும் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்கவும், விருப்பக் கொள்முதல் முகவராக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தை (ELCOT) தமிழக அரசு நியமித்துள்ளது. எல்காட் நிறுவனம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வன்பொருள்களை சமீபத்திய உள்ளமைவுடன் (Configuration) கூடிய சேவையகங்கள் (Servers), மேசைக்கணினிகள் (Desktop Computers), மடிக்கணினிகள் (Laptop Computers), அச்சுப்பொறிகள் (Printers), ஸ்கேனர் (Scanner) மற்றும் அனைத்து வலையமைப்பு சார்ந்த கருவிகளை (Network Devices)

நியாயமான விலையில் கொள்முதல் செய்து பல துறைகளுக்கும் வழங்கி வருகிறது. மேலும் எல்காட் நிறுவனம் இணையநெறிமுறை சார்ந்த ஒளிப்படக்கருவி (IP Camera), கண்காணிப்பு ஒளிப்படக்கருவிகளை (Surveillance Camera) அரசு அலுவலகங்களில் அமைக்கும் பணியைச் செயல்படுத்தி வருகிறது. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மடிக்கணினிகளை வழங்குதல், கருவூலம் மற்றும் கணக்குத் துறையை கணினிமயமாக்குதல், அனைத்து கிராம ஊராட்சிகளை கணினிமயமாக்குதல் மற்றும் பயிற்சியளித்தல் ஆகிய பணிகளை எல்காட் நிறுவனம் வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.

## மென்பொருள் உருவாக்கம்

எல்காட் நிறுவனம் விவசாய பயிர் மேலாண்மைத் திட்டத்தை திருச்சி, திருவாரூர், வேலூர், விருதுநகர், ஈரோடு, கடலூர், இராமநாதபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 8 முன்மாதிரி மாவட்டங்களில் மேற்கொண்டு வருகிறது. விவசாயிகள் தங்களுக்குள் பயிர் செய்வது தொடர்பான நுட்பங்களை அவ்வப்போது நிகழ்நிலைப்படுத்திக் கொள்வதற்கென தொடுதிரை வசதி சாத்தியமாக்கப்பட்டுள்ளது. அந்தந்தப் பருவத்திற்கென, பயிர் வளர்ச்சிக்கான



வழியலகுகளையுடைய அறிக்கைகள் மற்றும் அந்த இடத்திலேயே உடனடி ஆலோசனைகளும் கள அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது நிலவியல் மற்றும் சுரங்கத் துறையில் ‘இணையத்துடன் இணைந்த நிலையில் சுரங்க நிலபுல பதிவு முறையைச் செயல்படுத்துதல்’ மற்றும் வேளாண்மைத் துறையின் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு விவரப் பட்டியல் மேலாண்மையைச் செயல்படுத்துதல், அதனுடன் கையடக்க ரசீது கருவிகளை வழங்குவதற்கான பணிகளும் வளர்ச்சியில் இருந்து வருகிறது.

## மடிக்கணினி வழங்கும் திட்டம்

மாணவ சமுதாயம் தங்கள் கணினித் திறனை மேம்படுத்திக் கொள்ள உதவும் இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமாகத் திகழ்கிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவியர், அரசு மற்றும் அரசு அரசு உதவி பெறும் கலை அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் மற்றும் பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்றனர்.

இத்திட்டம் மாணவ மாணவியர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. மாணவர்களுக்கு மடிக்கணினிகள் கொள்முதல் செய்து வழங்கும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (எல்காட்) ஒப்படைக்கப்பட்டது. முதல் கட்டமாக **2011–12** ஆண்டில் **8,98,866** மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. **2012–13** ஆம் ஆண்டிற்காக **7,55,552** மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது மாணவ மாணவியர்களுக்கு விநியோகம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.



**அத்தியாயம் – III**

## தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு என்பது தரவு மையம், கணினி வலையமைப்பு மற்றும் தரவு மேலாண்மைக் கருவிகளை உள்ளடக்கியதாகும். இந்தியாவிலேயே, ஒரு முழுமையான பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநிலத் தரவு மையத்தினை வெற்றிகரமாக அமைத்து செயல்படுத்தி வரும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கென உள்ள தகவல் தொழில் நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு:–

அ) தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

ஆ) தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC)

இ) எல்காட் தரவு மையம்

ஈ) தேசிய அறிவுத்தள வலையமைப்பு (NKN)

### தமிழ் நாடு பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN)

தமிழ் நாடு பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN) திட்டம் ரூ.**181.69** கோடி மதிப்பீட்டிலானதாகும். மத்திய அரசின்

பங்கு ரூ.97.17 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.84.52 கோடி ஆகும். தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பில் 708 வலைய இணைப்பு முனைகள் (PoP) எல்காட் நிறுவனம் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மூலம் 2Mbps முதல் 8Mbps வரையிலான அலைக்கற்றை கொண்ட மிகுந்த பாதுகாப்புடைய இணைப்பு அனைத்து மாவட்டஆட்சியர் அலுவலகங்கள், தாலுக்கா மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் (BDO) இணைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் அனைத்து அரசுத் துறைகளும் தமிழ்நாடு அரசு தரவு மையத்தில் வைக்கப்பட்டுள்ள மூலக்கணினிகளை அணுக இயலும். இதன் செயல்பாடுகளை கட்டமைத்து, உடைமையாக்கி, இயக்கி உரிமை மாற்றல் (Build, Own, Operate and Transfer - BOOT) முறையில் 30.11.2012–ல் நிறைவுபெற்று அதன் செயற்பாடுகளை இரண்டாம் கட்டமாகத் தொடர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வலைய இணைப்பு, தமிழக அரசுத் துறைகளுக்கு குரல், தரவு, இணையம் மற்றும் காணொலி ஆகிய சேவைகளை வழங்குகிறது.



**தமிழ் நாடு பெரும் பரப்பு வலையமைப்பு (TNSWAN) – கிடைமட்ட இணைப்பு**

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பிற்கு வெளியே உள்ள அரசுத் துறைகளுக்கு இணைப்பு கொடுப்பதற்காகவும், அத்துறைகளின் பயன்பாடுகளை செயல்படுத்துவதற்காகவும், கிடைமட்ட இணைப்பு 708 வலைய இணைப்பு முனைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அரசுத் துறைகள் பிற சேவைகளான குரல், தரவு, இணையம் மற்றும் காணொலிக் காட்சி முதலியவற்றைப் பெற இயலும்.

இதுவரை வணிகவரித் துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (TWAD), தமிழ்நாடு சுகாதாரா ஒருங்கமைப்புத் திட்டம் (TNHSP) , கருவூலம் மற்றும் கணக்குத் துறை, பத்திரப் பதிவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வனத்துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA), மாநில நலவாழ்வு சங்கம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (TNHB), நில அளவைத் துறை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் (TANCEM), தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் கழகம் போன்ற 1853 அலுவலகங்களுக்கு இவ்வலையமைப்பின் கிடைமட்ட இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

## அகன்ற அலைவரிசை இணைப்பு

அகன்ற அலைவரிசை தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொலைத் தொடர்பினை நிகழ்நேரத்தில் பெற அதிக அலைக்கற்றை தேவைப்படுகிறது. அகன்ற அலைக்கற்றை என்பது அதிவேகத்தில் அதிக அளவிலான தரவுகளை பரிமாறிக்கொள்ள இயலும் அலைவரிசை ஆகும். எல்காட் நிறுவனம் இந்த அகன்ற அலைவரிசை இணைப்பினை அரசு அலுவலகங்களுக்கு குறைந்த விலையில் வழங்குகிறது. தமிழக அரசுப்பள்ளிகளோடு சேர்த்து கிட்டத்தட்ட **25,000** அரசு அலுவலகங்களுக்கு இந்த அகன்ற அலைவரிசை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC)

தமிழ்நாடு மாநில தரவு மையம், தேசிய மின் ஆளுமைத் திட்டத்தை (NeGP) செயல்படுத்த தேவையான உள்கட்டமைப்பு ஆகும். மத்திய மற்றும் மாநில அரசுகளின் பகிர்வு திட்டமான இது, ரூ.**60.80** கோடி உத்தேச செலவு மதிப்பீட்டில் (மத்திய அரசின் பங்கு ரூ.**55.80** கோடி, மாநில அரசின் பங்கு ரூ.**5** கோடி) செயல்படுத்தப்பட்டுள்ளது. தேசிய அளவில் தமிழகம் தான் முதன்



முதலில் தகவல் பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் தரவு மைய இயக்கங்கள் ஆகியவற்றுக்கான ISO/IEC 20000-1:2005 மற்றும் 27001:2005 தர சான்றிதழ்களை பெற்ற மாநிலம் ஆகும். தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் (TNSDC) செயற்பாடுகளில் இது ஒரு முக்கியமான மைல்கல் ஆகும்.

தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) – எல்காட் நிறுவனத்தின் பெருங்குடி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மிகப் பாதுகாப்பான இந்த உள் கட்டமைப்பில் அரசுத் துறைகள் தங்களது இணையத் தளங்களை நிறுவிக் கொள்ளலாம். தற்பொழுது அரசு துறை இணைய தளங்களான – தமிழ் நாடு சுகாதாரத் திட்டம் (TNHSP), சென்னை மெட்ரோ ரயில் திட்டம் (CMRL), மாநில தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் திட்டம், தமிழக அரசின் விலையில்லா மின் விசிறி, மின் அம்மி, மின் உரல் மற்றும் விலையில்லா மடிக் கணினி ஆகியவற்றின் மின்னணு வழி கோப்பு செயற்பாடு போன்ற பயன்பாட்டு மென்பொருட்கள் தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) வழியாக செயல்படுத்தப்படுகின்றன. மிக கட்டுப்பாடான சேவைநிலை ஒப்பந்தத்தின்படி (SLA) இந்த மாநில தரவு மையம்

(TNSDC) நிர்வகிக்கப்படுவதால், தடையற்ற (24 x 7) தொடர் இயக்கத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

## தேசிய அறிவுத் தள வலையமைப்பு (NKN)

தேசிய அறிவுத் தள வலையமைப்பு (NKN) என்பது இந்தியா முழுவதிலுமுள்ள கல்வி நிறுவனங்களை இணையத்துடனும், உலக அறிவியல் சமூகத்துடனும் இணைக்க மத்திய அரசால் நிறுவப்பட்ட தேசிய அளவிலான அதிவேக இணைய வலையமைப்பு ஆகும். இந்த தேசிய அறிவுத் தள வலையமைப்பு அறிவியலாளர்கள், ஆய்வாளர்கள், மருத்துவர்கள், கற்றறிவாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து மனித குல மேம்பாட்டிற்காக செயல்பட இணையத்தின் மூலமாக ஒரு பொதுவான தளத்தினை வழங்குகிறது. இதற்கு இணைய அலைக் கற்றைகளை வழங்குவோர் மத்திய அரசு முகமைகளான பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL), பவர்க்ரிட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் (PGCIL) மற்றும் ரெயில்டெல் நிறுவனங்கள் ஆகும். இந்த தேசிய அறிவுத்தள வலையமைப்பானது மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் உள்ள பல்வேறு திட்டங்களை செயல்படுத்த உதவுகிறது.



இந்த தேசிய அறிவுத் தள வலையமைப்பு அதிவேக இணையதள தொடர்பினை துவக்கத்தில் ஒரு நொடிக்கு 2.5 / 10 கிகாபிட் வேகத்தில் ஆரம்பித்து ஒரு நொடிக்கு 40 / 100 கிகாபிட் வேகம் வரை வழங்குகிறது. 1 Gbps வேகமுள்ள ஒரு தடமானது, தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் (TNSDC) 100 Mbps வேகமுள்ள இணையவலையத்துடன் இணைந்து முடிவுறுகிறது.

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) மற்றும் தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் (TNSDC) பயனாளர் அனைவரும் குறைந்தபட்சம் 100 Mbps அளவுள்ள தேசிய அறிவுத் தள வலையமைப்பின் (NKN) மிகப் பாதுகாப்பான இணையத் தொடர்பினை பயன்படுத்திக் கொள்ளலாம். இது தற்போது தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பில் (TNSWAN) வழங்கப்படும் 34 Mbps மற்றும் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் (TNSDC) வழங்கப்படும் 32 Mbps அளவு அலைக்கற்றையை விட மிக அதிகமாகும்.

## <u>தரவு பேரிடர் மீட்பு மையம் (DRC)</u>

தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) தமிழக அரசு மற்றும் அதன் துறைகளின் இணையத் தளங்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை பாதுகாப்பான முறையில் ஒருங்கிணைக்கிறது. எனினும் இயற்கை இடர்பாடு அபாயங்களான ஆழிப்பேரலை, நிலநடுக்கம், வெள்ளம் போன்றவை தரவு மையங்களுக்கு ஒரு சவாலாக உள்ளன. எனவே, தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் நிறுவப்பட்டுள்ள பல மின் ஆளுமை இணையதளங்களின் தடையற்ற தொடர் வணிகப் பயன்பாட்டினை உறுதிசெய்ய தரவு பேரிடர் மீட்பு மையம் (DRC) நிறுவுதல் அத்தியாவசியமாகிறது. எல்காட் நிறுவனம் இந்த தமிழ்நாடு மாநில தரவு பேரிடர் மீட்பு மையத்தை செயற்படுத்தும் முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது.



**அத்தியாயம் – IV**

# தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, மாநில ஒருங்கிணைப்பு முகமையாகவும் அரசின் ஒரு உள்ளார்ந்த கரமாகவும் திகழ்கிறது. இம்முகமை சங்கங்களின் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. அரசின் அனைத்து மின் ஆளுமை முயற்சிகளையும் மேற்கொள்ள இம்முகமை உறுதுணையாக உள்ளது. தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ், அரசு சேவைகளை பொது சேவை வழங்கு நிலையங்கள் மூலம் பொதுமக்களுக்கு தங்கள் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே திறம்படவும், வெளிப்படையாகவும் மற்றும் குறைந்த செலவிலும் வழங்கிடும் நோக்கத்துடன் இம்முகமை செயல்படுகிறது. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மின் மாவட்டத் திட்டம், பொதுச் சேவை மையங்கள் ஆகியவற்றை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகள், தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு மற்றும் மாநில சேவை இணைய தளம் உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## மின் மாவட்டத் திட்டத்தினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துதல்

தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் முன்னோடி மின் மாவட்டத் திட்டம் அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருவாரூர், கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் கிருஷ்ணகிரி, பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் செயல்பாட்டில் உள்ளது. இம்முன்னோடித் திட்டத்தின் கீழ் பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

| துறை | சேவை |
|---|---|
| வருவாய் | 1. சாதிச் சான்றிதழ்<br>2. இருப்பிடச் சான்றிதழ்<br>3. வருமானச் சான்றிதழ்<br>4. குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ்<br>5. கணவனால் கைவிடப்பட்டோருக்கான சான்றிதழ் |
| சமூக நலம் | 6. முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்<br>7. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்<br>8. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம்<br>9. ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்<br>10. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் |

| | |
|---|---|
| | நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்<br>11. அன்னை தெரேசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் |
| பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலம் | 12. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் திட்டங்கள்<br>13. தொழிற்கல்வி நிதியுதவித் திட்டம்<br>14. பட்டப் படிப்பிற்கான நிதியுதவித் திட்டம்<br>15. பட்டயப் படிப்பிற்கான நிதியுதவித் திட்டம் |
| ஆதிதிராவிடர் நலம் | 16. ஆதி திராவிட மாணவர்களுக்கான மைய அரசின் பள்ளி மேற்படிப்புதவித் திட்டம்<br>17. பழங்குடியின |



| | |
|---|---|
| | மாணவர்களுக்கான மைய அரசின் பள்ளி மேற்படிப்புதவித் திட்டம்<br>18. கிறிஸ்தவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கான மாநில அரசின் பள்ளி மேற்படிப்புதவித் திட்டம்<br>19. பட்டப்படிப்பிற்கான இலவச கல்வி உதவித் திட்டம் (கலை மற்றும் அறிவியல்)<br>20. பட்ட மேற்படிப்பிற்கான மாணவியருக்கான இலவச கல்வி உதவித் திட்டம் (கலை மற்றும் அறிவியல்) |

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதி திராவிட மாணவர்களுக்கான 9 கல்வி உதவித் திட்டங்கள் மின் ஆளுமை சேவை மூலமாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டுள்ளன. வருவாய் மற்றும் சமூக நலத்

துறைகளின் 11 சேவைகள் முன்னோடி மின் மாவட்டத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பல்வேறு துறைகளின் கூடுதல் சேவைகள் கண்டறியப்பட்டு மின்மாவட்டத் திட்டத்தின் கீழ் இச்சேவைகள் சேர்க்கப்பட்டு மின் சேவைகள் வாயிலாக வழங்கப்படும்.

தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ், மின் மாவட்டத் திட்டத்தை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாநிலத்தின் எஞ்சிய மாவட்டங்கள் மின் மாவட்டங்களாக மாற்றப்படும். மேற்குறிப்பிட்ட மின் ஆளுமை சேவைகள் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்படும். மாநிலம் முழுவதும் மின் மாவட்ட திட்டத்தினை செயல்படுத்த ஒரு தகுந்த திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவு செய்யப்படுவார்.

## மாவட்ட மின் ஆளுமை சங்கம்

அனைத்து மாவட்டங்களிலும் மின்மாவட்டத் திட்ட சேவைகள் மற்றும் இதர மின் ஆளுமை சேவைகளை செயல்படுத்தி மேற்பார்வையிட மாவட்டந்தோறும் மின் ஆளுமை சங்கங்கள் (District e-Governance Society) அமைத்திட



அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, 18 மாவட்டங்களில் மாவட்ட மின் ஆளுமைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பிற மாவட்டங்கள் இச்சங்கத்தினை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

## பொதுச் சேவை மையங்கள்

பொதுமக்களுக்கு, தங்கள் இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே அரசு சேவைகளைப் பெற்றிட வழிவகை செய்யும் நோக்குடன், பொதுச் சேவை மையங்களை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது, 2706 பொதுச் சேவை மையங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகிய அமைப்புகள் மின்சேவைகளை வழங்கி வருகின்றன. தற்பொழுது செயல்பட்டுவரும் பொதுச் சேவை மையங்களை மக்களின் தேவைக்கேற்ப விரிவுபடுத்தும் நோக்கத்துடன், மேலும் கூடுதலாகப் புதிய பொதுச் சேவை மையங்கள் திறந்த வெளி ஒப்பந்தம் மூலமாக அமைக்கப்பட உள்ளன.

## நகர்ப்புற பொதுச் சேவை மையங்கள் (Urban Common Service Centres)

நகர்ப் புறங்களில் சேவை வழங்குவதற்கு, நகர்ப்புற பொதுச் சேவை மையங்கள் சென்னை மாநகரில், முதல் கட்டமாக உருவாக்கப்பட உள்ளது. இம்மையங்களின் மூலம் ஒலி, ஒளி மற்றும் தரவு வாயிலான மின் ஆளுமை சேவைகள் மற்றும் இதர தனியார் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கிட சென்னை மாநகராட்சி மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. முதற்கட்டமாக நிபுணர் குழு ஒன்றினைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

## மாநில சேவை இணையதளம் (State Portal)

மாநில சேவை இணைய தளம் தமிழ்நாடு அரசின் மின் சேவைகள் மற்றும் தகவல்களை ஒற்றைச் சாளர முறையில் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் வழங்கக்கூடிய ஒரே முகப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாநில சேவை இணைய தளத்தின் பாதுகாப்பு தணிக்கை மற்றும் செயல்திறன் தணிக்கை முடிவடைந்துள்ளது. தற்பொழுது பளு திறன் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## வெப் ரத்னா விருது

இணையதளத்தில் மக்களுக்கு பயன்படும் தகவல்கள் மற்றும் மின் ஆளுமை சேவைகளை சிறப்பாக வெளியிட்ட மாநிலங்களுக்கு மத்திய அரசு விருதுகளை நிறுவியுள்ளது. அதன் அடிப்படையில் **2012–க்கான** “வெப் ரத்னா விருது” இணையதளத்தில் பரவலான பயன்பாட்டிற்காக தமிழக அரசுக்கு முதல் பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது தமிழக அரசின் மின் ஆளுகை முயற்சிகளுக்கு மேலும் ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது.

## திறன் மேம்பாடு (Capacity Building)

அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பின்வரும் குறிக்கோளை அடைவதற்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

- மின் ஆளுமையில் தரம் மற்றும் சீர்பாட்டினை ஏற்படுத்துதல்.
- தகவல் தொழில்நுட்பத்தை ஏற்பதற்கு தேவையான மாற்றத்தை ஏற்படுத்துதல்.
- தொடர் செயல்பாடுகளின் முறையை நடைமுறைக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தல்.

- செலவின கட்டுப்பாடு மற்றும் மனிதவள மேம்பாட்டு திறனை தேவைக்கேற்ப பயன்படுத்துதல்.
- வெளிச் சந்தையிலுள்ள மனிதவளத்தை தேவைக்கேற்ப பயன்படுத்துதல்.
- பிற இடங்களில் பயன்படுத்தப்படும் சிறந்த நடைமுறைகளை மேற்கொள்ளுதல்.

இந்த குறிக்கோள்களை எட்டுவதற்கு தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கீழ்க் கண்டவாறு அளிக்கப்பட்டு வருகின்றன.

- அடிப்படை கணிணி பயிற்சி.
- மின் ஆளுமை துவக்க நிலைப் பயிற்சி.
- மென் திறன் பயிற்சி.
- வன்பொருள் மற்றும் வலையமைப்பு பயிற்சி
- தரவு மேலாண்மை பயிற்சி.
- ஐ.பி.வி. 6 பயிற்சி.
- மாற்றங்களை கொணர்வதற்கு தேவைப்படும் மேலாண்மை பயிற்சி.
- தொடர் செயல்பாடுகளின் முறையை நடைமுறைப்படுத்தும் பயிற்சி.
- திட்ட மேலாண்மை பயிற்சி.



- மின் ஆளுமைத் திட்ட மென்பொருள் பயிற்சி.

2012–13 ஆம் ஆண்டில் மட்டும் 11,324 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இப்பயிற்சியின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

## மாநில மின் குறிக்கோள் குழு (SeMT)

தகவல் தொழில் நுட்ப ஆலோசகர்களை கொண்ட மாநில மின் குறிக்கோள் குழு **(SeMT)** ஒன்று தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கி வருகிறது. இக்குழுவின் ஆலோசகர்கள் அரசுத் துறைகளில் மின் ஆளுமை முயற்சிகளை செயல்படுத்துவதில் உதவுகின்றனர். மாநில அரசின் துறைகளில் தகவல் தொழில்நுட்ப குறிக்கோளை வடிவமைத்து திட்டமிடுதல், தொழில்நுட்பம், நிதி மற்றும் மாற்றங்களை கொணர்வதற்கு தேவைப்படும் மேலாண்மை திட்டங்களை செயல்படுத்தும் வகையில் ஒரு உள் ஆலோசனைக் குழுவாக இவ்வாலோசகர்கள் செயல்படுகின்றனர்.

## தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு

தமிழக அரசு புவிசார் தகவல் அமைப்பு ஒன்றினை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இந்த புவிசார் தகவல் அமைப்பு இயற்கை வளங்கள், சமூக–பொருளாதாரம், மக்கள் தொகை மற்றும் வேளாண்மை–பொருளாதார தரவுகளை ஒருங்கிணைத்து திட்டமிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையான தகவல்களை அளிக்கும். இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக வன்பொருள்களை வழங்குவதற்காக ரூ.43.50 இலட்சம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை தகவல் தொழில் நுட்பவியல் துறை மற்ற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வருகிறது.



அத்தியாயம் – V

# மின் ஆளுமை முயற்சிகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பங்கு

## 1. மின் ஆளுமைக்கான அரசு துறைகளுக்கான முதலமைச்சரின் உயரிய விருதுகள்

மின் ஆளுமை முயற்சிகளை வெற்றிகரமாகச் செயல்படுத்திட முனையும் துறைகளுக்கு ஊக்கமும், உரிய அங்கீகாரமும் அளித்திடும் வகையில் “**மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது**” வழங்க ஆணைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு துறைகளிலிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் ஆய்வு செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

## 2. மின் ஆளுமைக்கான மாணவர்களுக்கான முதலமைச்சரின் உயரிய விருதுகள்

வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயத்தினர், மாணவர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களுக்கிடையேயும் மின் ஆளுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையில், புதுமையான மென்பொருள் உருவாக்குகின்ற போட்டிகள் நடத்தப்பட்டு, அப்போட்டிகளில் புதுமையான மற்றும் சிறந்த மின் ஆளுமைக்கான மென்பொருட்களை உருவாக்கும் வெற்றியாளர்களுக்கு "**மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது**" வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மாணவர்களிடமிருந்து இவ்விருதுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு, விருதுகள் இறுதி செய்யப்படவுள்ளன.

## 3. மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுக்கு (Mission Mode Departments) உதவுதல்

கடந்த பத்து ஆண்டுகளாக அரசுத்துறைகள் தகவல் தொழில் நுட்பத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. பொது மக்களுக்கு சேவை வழங்குதலை முன்னிலைப்படுத்திட தமிழக அரசு 14 துறைகளை மாநில மின் ஆளுமைக்கென தேர்வு



செய்துள்ளது. தகவல் தொழில் நுட்பத்துறை இத்துறைகள் சேவை வழங்குவதற்கு ஏதுவாக தரவு மையம் (Tamil Nadu State Data Centre), தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network) மற்றும் பொது சேவை மையங்கள் (Common Service Centre) போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

எல்காட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை தேர்வு செய்யப்பட்ட துறைகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் திட்ட செயலாக்கம் ஆகியவற்றிற்கு பின் வருமாறு உதவி வருகின்றன.

| வ. எண் | திட்டம் | செயலாக்கத்திற்கான ஆதரவு |
|---|---|---|
| 1. | வேளாண்மை (அக்ரிஸ்நெட்) | விவசாயிகள் பயிர் சாகுபடி மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்த எல்காட் நிறுவனம் உதவுகிறது. பயிர் சாகுபடி குறித்த விபரங்களை சேகரிக்க 720 பெரிய அளவிலான ஆண்ட்ராய்ட் கைபேசிகள் வேளாண்மை துறை |

| | | |
|---|---|---|
| | | களப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| 2. | மக்கள் நல்வாழ்வு (எச்.எம். எஸ் மற்றும் எச்.எம் . ஐ. எஸ்) | 1) 267 மருத்துவமனைகள் மற்றும் 1613 ஆரம்ப சுகாதார மையங்களில் ஆவணங்களைப் பராமரிக்க எச்.எம்.எஸ் (மருத்துவமனை மேலாண்மை) மற்றும் எச்.எம்.ஐ.எஸ் (நல்வாழ்வு மேலாண்மை தகவல்) திட்டங்களை மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயல் படுத்தியுள்ளது. இத்திட்டம் 10000க்கும் அதிகமான மருத்துவமனை பயனாளர்களால் உபயோகப்படுத்தப்படுகிறது.<br>2) எல்காட் நிறுவனம் இத்திட்டத்திற்கு மூலக்கணினிகள் (Server), கணினிகள் மற்றும் |



| | | |
|---|---|---|
| | | மருத்துவமனைகளில் வலையமைப்பு ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது.<br>3) எச்.எம்.எஸ் மற்றும் எச்.எம்.ஐ.எஸ மென்பொருள்களை எல்காட் நிறுவனம், தமிழ்நாடு தரவு மையத்தில் நிறுவி மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வருகிறது. |
| 3. | பதிவுத்துறை (ஸ்டார் மற்றும் ரெஜினெட்) | 1) 2000 துறை அலுவலர்கள் பயன்பாட்டிற்கென சார் பதிவாளர் நிலையில் எளிதான மற்றும் திறந்தவெளி நிர்வாகத்திற்கென பதிவுத் துறையில் ஸ்டார் என்னும் மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது.<br>2) 600 அலுவலர்கள் பயன்படுத்தும் ரெஜினெட் திட்டம் எல்காட் நிறுவனத்தின் பராமரிப்பில் செயலாக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் நிலத்தின் வழிகாட்டி மதிப்பு, |

| | | |
|---|---|---|
| | | வில்லங்கச் சான்று மற்றும் திருமணப்பதிவு ஆகியவை பதிவு செய்யப்படுகின்றன. |
| 4. | வணிகவரி (மின்னணு மூலம் நமூனாக்கள் பதிவு) | 1) சரக கட்டுப்பாடு மற்றும் சோதனைச் சாவடி கட்டுப்பாடு ஆகியவற்றை நிர்வகிக்க வணிகவரித் துறையின் சார்பாக எல்காட் நிறுவனம் மென்பொருள் உருவாக்கி பராமரித்து வருகிறது.<br>2) சுமார் 3 இலட்சம் வணிகர்கள் பதிவு செய்து, மின்னணு மூலம் நமூனாக்கள் பதிவு செய்தல், மின்னணு மூலம் வரி செலுத்துதல் 100 விழுக்காடு செயல்படுத்தப்பட்டுள்ளது.<br>3) சுமார் 1000 துறை அலுவலர்கள் இந்த மென்பொருளை நிர்வகிக்கின்றனர். |



| | | |
|---|---|---|
| 5. | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி (தமிழ்நாடு வேலைவாய்ப்பு) | 1) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பாக 48 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இணையதளத்தில் பதிவு செய்யும் இணையத்தை எல்காட் நிறுவனம் செயல்படுத்தியுள்ளது.<br>2) அரசுத் தேர்வுத் துறை இயக்ககத்துடன் இவ்விணையதளம் ஒருங்கிணைக்கப்பட்டு ஆண்டுதோறும், 11.6 இலட்சம் 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவர்களின் பதிவு உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. |
| 6. | போக்குவரத்துத் துறை | 90 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் எல்காட் நிறுவனம் ஓட்டுநர் உரிமம் வழங்கும் மையங்களை இயக்கி வருகிறது. ஆண்டுதோறும் சுமார் 15 இலட்சம் |

| | | |
|---|---|---|
| | | ஒட்டுநர் உரிமங்கள் இதில் வழங்கப்படுகின்றன. |
| 7. | காவல் துறை | காவல் துறையின் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலை பின்னல் (CCTNS) திட்டத்திற்கு எல்காட் நிறுவனம் மாநில திட்ட மேலாண்மை ஆலோசகர் ஆகும். |
| 8. | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (குடும்ப அட்டை பராமரிப்பு) | 1) குடும்ப அட்டைகளின் தரவுகளை வலைத்தள சூழலில் மென் பொருள் தயாரித்து எல்காட் நிறுவனம் செயல்படுத்தியுள்ளது. இம்மென்பொருள் அனைத்து வட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களில் குடும்ப அட்டை நகல்கள் அச்சிடப்பட்டுள்ளது.<br>2) 1700 நியாய விலைக்கடைகளில் ஜி.எஸ்.எம் / ஜி.பி.ஆர்.எஸ் அடங்கிய கையடக்க பட்டியல் |



| | | |
|---|---|---|
| | | கருவிகளை எல்காட் நிறுவனம் நிறுவியுள்ளது. இதன் மூலம் உடனுக்குடன் தரவு பரிமாற்றம் நடைபெறுகிறது. |
| 9. | கருவூலக் கணக்குத் துறை | ரூபாய் 1 கோடி செலவில் ஒருங்கிணைந்த நிதி மேலாண்மைத் திட்டம் (IFMS) மற்றும் மனித வள மேலாண்மை திட்டம் (HRMS) ஆகியவற்றிற்கான தகவல் தொழில் நுட்ப ஆலோசனைகளை எல்காட் நிறுவனம் வழங்கியுள்ளது. |
| 10 | நகராட்சிகள் | நகராட்சி மின் ஆளுமை திட்டத்தினை சென்னை மாநகராட்சியில் எல்காட் நிறுவனம் செயல்படுத்தியுள்ளது. சொத்துவரி, பணிகள் மேலாண்மை, சரக்கு இருப்பு நிர்வாகம், வரவு செலவு பராமரிப்பு மற்றும் குறைபாடுகள் நீக்கம் ஆகியவைகள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| | | இம்மென்பொருள் 1000 அலுவலர்களால் பயன்படுத்தப்படுகின்றது. |
| 11. | வருவாய் | வருவாய்த் துறையின் சான்றுகள் மின் மாவட்டத்தின் மூலம் வழங்குவதை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டம் கிருஷ்ணகிரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. |
| 12. | சமூகநலம் | சமூக நலத்துறையின் திருமண உதவித் திட்டங்களை மின் மாவட்டத்தின் மூலம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல் படுத்தியுள்ளது. இத்திட்டம் கிருஷ்ணகிரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் |



| | | |
|---|---|---|
| | | செயல்படுத்தப்பட்டுள்ளது. |

## 4. <u>சேவை விளக்கக் கோப்பகம்</u>

அரசுத் துறைகள் தமது சேவைகளை மக்களுக்கு இணையம் மூலம் வழங்கி வருகின்றன. இணையத்தைப் பயன்படுத்துவது மற்றும் இணையதள முகவரிகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது பொதுமக்களுக்கு சிரமமானதாக உள்ளது. இதனால் பொதுமக்கள் அரசின் சேவைகளைப் பெற அரசு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல நேரிடுகிறது. பொதுமக்களின் வசதிக்காகவும், இணையதள வழிச் சேவைகளை பரப்பிடும் வகையிலும், ஒரு சேவைக் கோப்பகத்தை தமிழக அரசின் இணையதளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை செயல்படுத்திட ஒரு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு அதற்கான மென்பொருள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 5. <u>திட்ட கண்காணிப்பு மென்பொருள்</u>

அரசின் திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடைய, திட்டங்களின் செயல்பாட்டினை காலமுறை அடிப்படையில் கண்காணித்து ஆய்வு செய்வது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒரு புதிய கண்காணிப்பு மென்பொருள் (Scheme Monitoring Application Software) உருவாக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை அதிகாரிகள் எந்நேரமும் இணையம் மூலமாகக் கண்காணிக்கவும், அதன் அடிப்படையில் தக்க முடிவுகளை மேற்கொள்ளவும் இயலும். இதனை செயல்படுத்திட திறந்த ஒப்பந்தப் புள்ளி முறையில் ஒரு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு மென் பொருள் தயாரிக்கப்பட்டு வருகிறது.

## 6. <u>தகவல் தொழில் நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை</u>

அரசு இணையதளங்கள் மற்றும் மென்பொருட்களில் ஏதேனும் பாதுகாப்பு குறைபாடு இருப்பின், அதனைப் பயன்படுத்தி இணையவழி ஊடுருவிகள் (Hackers) இணையதளங்களை உருக்குலைத்துவிடாதிருக்கத் தேவையான தகவல் தொழில் நுட்பப் பாதுகாப்புத் தணிக்கை நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்வதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பின்வரும்



துறைகளின் இணையதளம் மற்றும் மென்பொருட்கள் தணிக்கை முடிவடைந்துள்ளது.

1. சென்னை மெட்ரோ இரயில்
2. சென்னை மாநகராட்சி
3. அரசு தேர்வுத்துறை இயக்ககம்
4. மின் விநியோக குழுமம்
5. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
6. தமிழ்நாடு வனத்துறை
7. தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம்
8. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்
9. தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்
10. தமிழ்நாடு கருவூலம் மற்றும் கணக்குத் துறை

பாதுகாப்புத் தணிக்கை என்பது ஒரு தொடர் முயற்சியாகையால் இதனைச் செயல்படுத்திட சம்பந்தப்பட்ட துறைகள் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

## 7. அரசு ஊழியர்களுக்கு இணையதளம் வாயிலாக பாடங்கள் (e-Learning content for Government Employees)

தமிழ்நாட்டில் மின் ஆளுமை திட்டங்களை முழுஅளவில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக அரசு ஊழியர்களின் தகவல் தொழில்நுட்பத் திறமையை ஊக்குவிக்க, அரசு தொடர்ந்து பெரு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது. அதிகரித்து வரும் திறன் மேம்பாடு தேவைகளை சந்திக்க வேண்டி அரசு ஊழியர்களுக்கு இணையதளம் வாயிலாக பயிற்சி அளிப்பதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த இணையதளம் பயிற்சிப் பாடங்களை கொண்ட களஞ்சியமாக இருக்கும். பயனாளிகள் நேரம் இடம் பார்க்காமல் இந்த இணையத்தளப் பாடங்களை பார்த்து கற்றுக் கொள்ள இந்த அமைப்பு உதவும். பயனாளிகள் தங்கள் வசதிக்கேற்ப இப்பாடங்களைக் கற்றுக் கொள்ளும் வகையில் இந்த அமைப்பு உள்ளது. இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பாடங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

## 8. துறைகளின் பயன்பாடுகளை மறு வடிவமைத்தல் (Redesigning of the Departmental Applications)



அனைத்து துறைகளும் தங்களது மின் ஆளுமை முயற்சிகளை பல்வேறு காலக் கட்டங்களில் மேற்கொண்டு அவற்றை செயல்படுத்தி வருகின்றன. அவ்வாறு உருவாக்கப்பட்ட மென்பொருட்கள் பல்வேறு இயக்கு தளங்கள் மற்றும் தொழில் நுட்பங்களை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சில மென்பொருட்கள் தரநிர்ணயத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகவும், பல மென்பொருட்கள் பழமையான தொழில்நுட்பத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டவையாகவும் உள்ளன. அண்மையில் உணவுப் பொருள் வழங்கல், வணிக வரித்துறை, சுகாதாரம், காவல் துறை, பதிவுத் துறை மற்றும் கருவூலம் மற்றும் கணக்குத் துறை ஆகியவை தங்கள் மென் பொருட்களை மறுவடிவமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

எஞ்சிய துறைகளும் தங்கள் மென்பொருட்கள் மறு வடிவமைப்பினை படிப்படியாக மேற்கொள்ளும். இது தொடர்பாக விரிவான நெறிமுறைகள் அடங்கிய அரசாணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

## 9. மின் ஆளுமை கருத்தரங்குகள்

## 9.1 மின் மாவட்ட கருத்தரங்குகள்

தமிழக அரசு, 16.10.2012 அன்று மின் மாவட்ட கருத்தரங்கு ஒன்றினை சென்னையில் நடத்தியது. இக் கருத்தரங்கில் மின்மாவட்ட திட்ட செயல்பாடு குறித்த விழிப்புணர்வு, செயல்படுத்தும் வழிவகைகள் மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் மக்களுக்கு வழங்குவதில் மாநிலங்களின் செயல்திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது. அந்தமான் நிக்கோபார் தீவுகள், ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களின் தகவல் தொழில் நுட்பத் துறை பிரதிநிதிகள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர். மைய அரசின் தகவல் தொழில் நுட்பத் துறை செயலக அதிகாரிகள் சிறப்புரையாற்றினர்.

## 9.2 மின் ஆளுமை தலைமைப் பொறுப்பாளர்கள் சந்திப்பு கூட்டம்

திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அங்கமாக கொள்கை முடிவெடுக்கும் ''தலைமைப் பொறுப்பாளர்களின் கூட்டம்'' ஒன்றினை நடத்திட மைய அரசின் தகவல் தொழில்நுட்பத்துறை அனுமதியளித்தது. அரசின் பல்வேறு சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்டு மக்களுக்கு எளிய முறையில்



சென்று சேரும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்திட இந்த சந்திப்பு கூட்டம் வழிவகை செய்துள்ளது. சென்னையில், 14.12.2012 அன்று மின் ஆளுமை தலைமைப் பொறுப்பாளர்களின் கூட்டத்தை தமிழக அரசு நடத்தியது.

## 10. மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம்

மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம் என்பது மக்களுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்புகளை பலப்படுத்துவதாகும். இந்த விழிப்புணர்வு முகாம் வேலூர், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள அரசு உயர்நிலை பள்ளிகளில் 702 மாணவர்களுக்கு நடத்தப்பட்டது. அடிப்படை தகவல் தொழில் நுட்பவியல், மின் ஆளுமை விழிப்புணர்வு, தொலைநோக்கு பார்வை, சேவைகள் வழங்குவதில் விழிப்புணர்வு, மின் ஆளுமை மூலம் சேவைகளைப் பெறுவது, பொதுமக்கள் தொடர்பு மையங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகள் இந்த முகாம்களில் விளக்கப்பட்டன.

மாநில அளவிலான மின் ஆளுமை விழிப்புணர்வு கருத்தரங்கு சென்னையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கோயம்புத்தூர், திருச்சி, வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கி வட்டார அளவில் மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

## 11. பொது மக்கள் தொடர்பு மையம்

பொது மக்கள், அவசரநிலையற்ற அரசு சேவைகளைப் பெற்றிட உதவி செய்யும் நோக்குடன், மைய அரசின் நிதியுதவியுடன், முன்னோடி திட்டமாக மாநில அளவில் ஒரு மக்கள் தொடர்பு மையம் உருவாக்கப்படவுள்ளது. பல்வேறு துறைகளின் சேவை முகப்புகள், இணையதளம் மற்றும் சேவை மையங்கள் ஆகியவற்றின் மூலம் சில சேவைகள் மற்றும் தகவல்கள் வழங்கப்பட்டாலும், இம்மக்கள் தொடர்பு மையம், தொலைபேசி மற்றும் கைபேசிகளின் விரிவான பயன்பாட்டினால், அதிக பயனுடையதாகவும், மலிவானதாகவும், நாடு முழுவதும் ஒரே தொலைபேசி தொடர்பு எண்ணுள்ளதாகவும் இருக்கும். இம்மையத்தினை சென்னையில் அமைப்பதற்கு ஒப்புதல் பெறுவதற்கான வரைவு திட்ட அறிக்கை ஒன்று மைய அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி முதல் மூன்று ஆண்டுகளுக்கு மைய அரசின் நிதியுதவியுடன் இம்மையம்



செயல்படும். அதன் பிறகு இம்மையம் மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படும்.

அத்தியாயம் – VI

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தனியார் தொழில் துறையின் பிரதிநிதியாகத் திகழும் சி.ஐ.ஐ (Confederation of Indian Industry-CII)–ன் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம்

ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயற்படாத ஒரு சங்கமாகும். அது சிறப்பு வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னோடிகள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட குழு மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நோக்கம், தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த செயற்களத்திலுள்ள உயர் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், அதன்மூலம் மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கும் மற்றும் தகுதியைப் பெற்று பயனடைவதற்குமேயாகும்.

## 2012–13 ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

- 2012–13 ஆம் ஆண்டில், தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்ப நிறுவனம் பெரிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து 650 தமிழக உயர்கல்வி நிறுவனங்களிலுள்ள 1352 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.
- 3500 மாணவர்களுக்கு அடிப்படை கணினி பயிற்சிக்கான தேர்வு நடத்தி சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.



- 70 ஆசிரியர்களுக்கு திறன் வளர்ச்சி பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்ப நிறுவனம் 3 பன்னாட்டு ஆய்வு இதழ்களையும், 98 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளது.
- 2012–13 ஆம் ஆண்டில் மட்டும் 12 தொழில்நுட்பக் கருத்தரங்குகளும், 12 கல்வி தொடர்பான மாநாடுகளும் நடத்தப் பெற்றன.
- அரசு கலைக்கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் சுமார் 5000 மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு, திறமை மிக்க மாணவர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றனர்.

## பன்னாட்டு ஆராய்ச்சி இதழ்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் காலாண்டுக்கு ஒரு முறை, அதாவது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, பன்னாட்டு ஆய்வு இதழ்களை கீழ்க்கண்ட துறைகளில் வெளியிட்டு வருகிறது:–

- தகவல் தொழில்நுட்பம்

- மென்கணினி
- ஒளிப்பேழை அல்லது காட்சி ஒளிப்பேழை

இப்பன்னாட்டு ஆராய்ச்சி இதழ்கள், திறமை வாய்ந்த அறிவியல் விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் கருத்தோவியங்களைத் தாங்கி வெளிவருகின்றன. 2012–2013 ஆம் கல்வியாண்டில் 98 ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் மூன்று பன்னாட்டு ஆய்வு இதழ்கள் வெளிவந்துள்ளன. இந்த இதழ்கள் பற்றிய அட்டவணை, விவரம் ஆகியவற்றை (Index Copernicus) இணைய தளத்திலும் அறிந்த கொள்ள இயலும். இந்த இதழ்களுக்கு 5.09 ICV (Index Copernicus Value) மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

## மாநாடு மற்றும் கருத்தரங்கம்

- 2012–2013 ஆம் ஆண்டில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மூன்று ஐசிடிஎசிடி பிரிட்ஜ் (ICTACT BRIDGE) மாநாடுகளை தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் வெற்றிகரமாக நடத்தியுள்ளது.



- இது தவிர, இந்நிறுவனத்துடன் தொடர்புடைய துறை சார்ந்த வளர்ச்சி, நிறைகுறை, மதிப்பிடல் தொடர்பாக 9 கூட்டங்களை நடத்தியுள்ளது.
- 2012–2013 ஆம் கல்வியாண்டில், இந்நிறுவனத்தின் சார்பில் மாணவர்களுக்கான 12 திறன்மிகு கருத்தரங்குகள் நடைபெற்றன.
- மற்ற நிறுவனங்களுடன் இணைந்து 7 தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது.

## 5000 அரசு கல்லூரி மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் 2500 மாணவர்களுக்கும், அரசு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 2500 மாணவர்களுக்கும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மென்திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியின் மூலம் 5000 மாணவர்கள் பயன் அடைவர்.

அத்தியாயம் – VII

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

## 1. தமிழ் இணையக் கல்விக்கழகம் – நோக்கம்

உலகு தழுவிய நிலையில் வாழும் தமிழ் மக்களும் தமிழில் ஈடுபாடு கொண்டுள்ள பிற மொழியினரும் தமிழ் மொழியையும், அறிவியல், தொழில்நுட்பம், கணினித் தமிழ் மற்றும் தமிழ் பயன்பாட்டு மென்பொருள்களைக் கற்கவும், தமிழர் வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவை பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக



ஏற்படுத்துவதும், அரசு, கல்வி, ஊடகம், வணிகம் போன்ற பல்துறைகளுக்கும் வேண்டிய கணினித் தேவைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து, நிறுவி, பராமரித்து, பயிற்சியளித்துப் பயன்பாட்டை பெருக்குதலும் இணையவழி அளிப்பதும் இதன் நோக்கமாகும்.

## 2. கல்வித் திட்டங்கள்

- தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது மழலையர்க் கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், இளங்கலை (தமிழியல்) பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது.
- 70 நாடுகளைச் சேர்ந்த **13409** மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர்.
- **2649** மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிலும், **29** மாணவர்கள் மேற்சான்றிதழ்ப் படிப்பிலும், **250** மாணவர்கள் பட்டயத் தேர்விலும், **135** மாணவர்கள் மேற்பட்டயத்திலும், **132** மாணவர்கள் பட்டத் தேர்விலும் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர்.
- உலகெங்கிலும் உள்ள **17** நாடுகளில் உள்ள **59** ஒருங்கிணைப்பு மையங்கள் மூலம் இக்கல்வித் திட்டங்கள்

வழங்கப்படுகின்றன.

- தமிழ் இணையக் கல்விக் கழகம் மழலையர், சான்றிதழ், இடைநிலை, மற்றும் மேல் நிலை, தமிழ்ப் பயிற்சி, தமிழ் கற்போம், திருக்குறள், கலைச்சொல் பேரகராதி ஆகியவைகளைக் குறுந்தகடுகளில் தயாரித்து மாணவர்களின் நலனுக்காக வெளியிட்டுள்ளது.
- இணைய வகுப்பறையில், தமிழ் மொழி கற்பதற்கான பாடங்களும், இளங்கலை தமிழியல் பட்டக் கல்விக்கான பாடங்களும் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன.
- மேலும் பிரெஞ்சு மொழி வழி தமிழ் பயிற்றுவிக்கும் பாடங்கள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு வருகின்றன.
- இவை அனைத்தும் http://www.youtube.com -லும் இடப்பட்டுள்ளன.

### 3. மின் நூலகம்

தமிழ் இணையக் கல்விக்கழகம் மின் நூலகத்தில் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள், அகராதிகள், தமிழ் தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கலைக்களஞ்சியம், பண்பாட்டுக் காட்சியகம், சுவடிக் (ஓலை) காட்சியகம் ஆகியவை



மாணவர்கள் மற்றும் பார்வையாளர்கள் உபயோகத்திற்காகத் தளத்திலிடப்பட்டுள்ளன.

### 4. தமிழ் மென்பொருள் வளர்ச்சி

ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், கையெழுத்துப் பிரதியிலிருந்து ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், மின் அகராதி, தமிழ் சொற்களஞ்சியம், செல்பேசியில் நுண்ணறிவு தகவல் பெறும் சாதனம் போன்ற பல தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் முன்அறி தமிழ்ச்சொல் வடிவமைப்பு மென்பொருள் உருவாக்கும் பணி நடைபெற்றுவருகிறது

### 5. செந்தர எழுத்துருக்கள்

ஒருங்குறி (Unicode) மற்றும் அனைத்துரு எழுத்துரு (TACE) முறைகள் தமிழ்நாடு அரசின் செந்தரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப எழுத்துருக்களையும், விசைப்பலகை இடைமுகங்களையும் உருவாக்கி இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன.

### 6. கலைச்சொல் பேரகராதிகள் வெளியீடு

பல்வேறு பல்கலைக் கழகங்கள் தொகுத்து அளித்துள்ள ஏறத்தாழ 2,50,000 கலைச்சொற்கள் துறைவாரியாகப் பகுக்கப்பட்டு 14 தொகுதிகளாய் வெளியிடப்பட்டுள்ளன. அவை குறுந்தகடு வடிவிலும் வெளியிடப்பட்டுள்ளன.

## 7. தமிழகத் தகவல் தளம்

தமிழ்நாடு அரசு தமிழ் இணையக் கல்விக்கழகமும், தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொள்ளும் கணினி வழி தமிழ் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான தமிழகத் தகவல் தளம் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ், தமிழர், தமிழ் மொழி, தமிழ் இலக்கியங்கள், தமிழ்நாட்டுக் கலைகள், தமிழ்நாட்டின் நிலவியல், வரலாற்றுச் சிறப்புமிக்க ஊர்கள், ஆறுகள், மலைகள், தமிழகத் திருவிழாக்கள், பண்டைய பெயர்கள், தமிழக மரம், செடி, கொடி, விலங்கினங்கள், கோயில்கள், சிற்பங்கள் போன்ற புள்ளி விவரங்கள் அனைத்தையும் தகவல் தளங்களாக உருவாக்குதல் இதன் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கும், தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் தலா ரூ.12,00,000/– வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் திட்டப் பணிகளில் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், வழங்கியுள்ள



52,690 ஓலைச் சுவடிகளையும் மற்ற தகவல்களையும் தளமேற்றும் பணி தற்பொழுது தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் செவ்வனே நடைபெறுகின்றது.

## 8. கணினித் தமிழ் ஆய்வுக் கூடம்

தமிழ் மென்பொருள்களை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படை ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வளர்ச்சிபெறச் செய்ய ஒரு கணினித் தமிழ் ஆய்வுக் கூடம் தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இலக்கண குறிப்புடன் சொல் களஞ்சியம், தொடரியல் மற்றும் பொருண்மையியல் இலக்கண களஞ்சியம், மின் அகராதி ஆகியவற்றை உருவாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அத்தியாயம் – VIII

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்

அரசு கேபிள் டிவி நிறுவனம் என்ற தமிழக அரசு நிறுவனம் இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் 04.10.2007அன்று துவங்கப்பட்டு இதற்கென தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் தலா ரூ.8 கோடி செலவில் டிஜிட்டல் தலைமுனைகள் அமைக்கப்பட்டன. குறைந்த விலையில் சிறந்த கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்குவது இதன் நோக்கமாகும்.



பல்வேறு காரணங்களினால் செயலிழந்த நிலையில் இருந்த அரசு கேபிள் டிவி நிறுவனம் இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புனரமைக்கப்பட்டு புத்துயிரூட்டப்பட்டது. இதற்காக இந்நிறுவனத்திற்கு ரூ.3 கோடி நிதியுதவி கடனாக வழங்கப்பட்டது. மேலும், இந்நிறுவனத்தின் பெயர் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் என மாற்றம் செய்யப்பட்டது.

தமிழகத்தின் 27 மாவட்ட தலைநகரங்களில் விருப்பமுள்ள தனியார் கேபிள் ஆப்பரேட்டர்களின் கட்டுப்பாட்டு அறைகளை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் குத்தகைக்கு எடுத்ததுடன், ஏற்கனவே 4 மாவட்டங்களில் இருந்த நிறுவனத்தின் கட்டுப்பாட்டு அறைகளை புனரமைத்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.08.2011 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தரமான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் வழங்கும் எனவும், இதில் ரூ.20/–ஐ கேபிள் ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி

நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **2.09.2011** அன்று வேலூரில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன தலைமுனையினை காணொலிக் காட்சி வாயிலாக இயக்கி வைத்து இந்நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையினை சென்னை தவிர தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் துவக்கி வைத்தார்கள். **20.10.2012** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரப் பகுதிகளுக்கான தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையினைத் துவங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பொதுமக்களுக்கு ரூ.70/– என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் **90–100** சேனல்களுடன் தரமான கேபிள் டிவி சேவையை வழங்கி வருகிறது. இதன்மூலம் மிக அதிக அளவிலான கேபிள் டிவி ஆப்பரேட்டர்களும், பொதுமக்களும் தமிழ் நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையினை பெற்று வருகின்றனர்.

**02.09.2011**ல் இந்நிறுவனம் தனது சேவையை தொடங்கியபோது இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின்



எண்ணிக்கை **4.94** இலட்சங்கள் என இருந்தது. இந்த எண்ணிக்கை **31.03.2013** அன்றைய நிலவரப்படி **61,54,531** என உயர்ந்துள்ளதிலிருந்து இந்நிறுவனத்தின் மாபெரும் வளர்ச்சியை அறியலாம். மேலும் இந்நிறுவனத்தின் இணைப்பு பெற்றுள்ள ஆப்பரேட்டர்களின் எண்ணிக்கை **24,300** என உயர்ந்துள்ளது. இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கையை ஒரு கோடி என உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் **137** கட்டணச்சேனல்களின் சிக்னல்களை வாங்கியுள்ளது. இந்நிறுவனம் தற்போது ஏறத்தாழ அனைத்து கட்டணச் சேனல்களையும் பெற்றுள்ளது. இந்நிறுவனம் தற்பொழுது இலவச சேனல்கள், கட்டணச்சேனல்கள் மற்றும் உள்ளூர் சேனல்களுடன் சேர்த்து மொத்தம் **90** முதல் **100** சேனல்களை பொதுமக்களுக்கு வழங்கிவருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தனது சேவையினை தொடங்குவதற்கு முன்னர் ஒரு சில தனியார் நிறுவனங்கள் கேபிள் தொழிலில் ஆதிக்கம் செலுத்தியதுடன், கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து அதிக

அளவு கட்டணங்களை வசூலித்து வந்தன. அப்போது பொதுமக்கள் கேபிள் டிவி சேவையை பெற தனியார் கேபிள் டிவி நிறுவனங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150 முதல் ரூ.250 வரை கேபிள் டிவி சேவைக்கான மாத சந்தா தொகையாக செலுத்தி வந்தனர்.

தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தினால் அளிக்கப்பட்டுவரும் கேபிள் டிவி சேவை, கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசால் உருவாக்கப்பட்ட நலத்திட்டமாகும். தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் பெருமளவிலான கட்டணச் சேனல்களுடன் ரூ.70 என்ற மிக குறைந்த கட்டணத்தில் கேபிள் டிவி சேவையை அளித்து வருகிறது. இதனால் பொது மக்களுக்கு மாதந்தோறும் ரூ.80 முதல் ரூ.180 வரை சேமிப்பு ஏற்படுகிறது. எனவே, தமிழ்நாடு அரசு கேபிள் டிவியின் கேபிள் டிவி சேவை பொதுமக்களிடம் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் இதுவரை 1200 உள்ளூர் சேனல்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கியுள்ளது. அவற்றுள் சுமர் 800 உள்ளூர்



சேனல்கள் இந்நிறுவனம் வாயிலாக தங்களுடைய நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றன.

## <u>சென்னை மாநகர சேவை துவக்கம்</u>

20.10.2012 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையை சென்னை மாநகரப் பகுதிகளில் துவக்கி வைத்தார்கள். இந்நிறுவனம், சென்னை மாநகரப் பகுதிகளில் அனலாக் சிக்னல்களை உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களுக்கு அளித்து வருகிறது. மேலும், டிஜிட்டல் முறையிலான சிக்னல்களை வழங்கிட உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 100 தரமான தெளிவான சேனல்களை உள்ளூர் கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் வாயிலாக மாதம் ரூ.70 என்னும் குறைந்த கட்டணத்தில் சென்னை மாநகரப் பகுதிகளில் உள்ள சந்தாதாரர்களுக்கு அளித்து வருகிறது.

## <u>டிஜிட்டல் மயமாக்கம்</u>

அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு மத்திய அரசின் தகவல் ஒளிபரப்பு அமைச்சகம் சென்னை மாநகரத்தின் கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு (Conditonal Access System-CAS) பகுதிகளுக்கு பன்முனை அமைப்பு ஆப்பரேட்டர் (Multi System Operator-MSO) உரிமம் வழங்கியுள்ளது. மத்திய அரசின் கேபிள் டிவி நெட்வொர்க் திருத்தச் சட்டம் **2011–**ன்படி நாடு முழுவதும் **31.12.2014**க்குள் கேபிள் டிவி சேவைகள் டிஜிட்டல்மயமாக்கப்பட வேண்டும். இதில் முதல்கட்டமாக சென்னை உள்ளிட்ட நான்கு பெருநகரங்களை டிஜிட்டல்மயமாக்கிட வேண்டும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் டிஜிட்டல்மயமாக்கலுக்கு தேவையான, டேஸ் (Digital Access System-DAS) பகுதிகளுக்கான பன்முனை அமைப்பு ஆப்பரேட்டர் (MSO) உரிமம் வழங்கக் கோரி **05.07.2012** அன்று மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்து, அவ்விண்ணப்பம் நிலுவையில் உள்ளது.

## <u>சென்னை மாநகரப் பகுதியை டிஜிட்டல்மயமாக்க நிறுவனம் எடுத்துவரும் நடவடிக்கைகள்</u>

சென்னை மாநகரப் பகுதியில் டிஜிட்டல் சிக்னல் வழங்கி டிஜிட்டல்மயமாக்கிட, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்



நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிறுவனம் ரூ.**20.72** கோடியை டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறையை மேம்படுத்தவும், கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு (Conditional Access System-CAS), சந்தாதாரர் மேலாண்மை அமைப்பு (Subscriber Management System-SMS) மற்றும் செட்–டாப் பாக்ஸ்கள் வாங்கவும், தகவல் மையம் மற்றும் கட்டுப்பாட்டு அறை தொடர்பான இதர உபகரணங்கள் வாங்கவும் முதலீடு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் இணைய விருப்பம் தெரிவித்து சென்னை மாநகர பகுதியில் உள்ள **14,66,336** சந்தாதாரர்களைக் கொண்ட **2577** கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் இந்நிறுவனத்தில் பதிவு செய்து உள்ளனர். **1223** கேபிள் டிவி ஆப்பரேட்டர்கள் செட்–டாப் பாக்ஸ்கள் கேட்டு பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் டிஜிட்டல் அக்ஸஸ் சிஸ்டம் (Digital Access System-DAS) உரிமம் கிடைக்கப்பெற்றதும், சென்னை மாநகரப் பகுதிகளில் டிஜிட்டல் முறையில் கேபிள் டிவி சேவையை அளிக்க உள்ளது.

அத்தியாயம் – IX

# 2013–2014 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

## தமிழ் மென்பொருள் உருவாக்கும் மையம் ஏற்படுத்துதல்

தமிழ் மென்பொருள் உருவாக்கத் தேவையான கணிப்பொறிகள், மென்பொருள்கள், கருவிகள் மற்றும் சேவைகளை உள்ளடக்கிய தமிழ்மென்பொருள் உருவாக்கும் மையம் (Tamil Software Incubation Centre) ஒன்று தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் நிறுவப்படும். ஆக்கப் பூர்வ எண்ணங்களை கொண்டிருப்போர் தேவையான ஆய்வு



மேற்கொள்ளவும், பரிசோதிக்கவும், மேம்படுத்தி செம்மைபடுத்தி உலகிற்கு வழங்கவும் இந்த மையம் துணைபுரியும். இதற்காக **2013–2014** ஆம் ஆண்டின் பகுதி **2–**ஆம் திட்டத்தின் கீழ் தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு ரூ.**50** இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## கைப்பேசி சேவை வழங்கல்

தமிழ்நாடு, கைப்பேசி உபயோகம் அதிக அளவில் உள்ள ஒரு மாநிலமாகும். மாநிலத்தில் அரசு சேவைகளை பல வகை சாளரங்கள் வழி வழங்க, அதிக அளவில் உபயோகப்படுத்தப்படும் கைப்பேசிகள் மூலம் சேவை வழங்கும் திட்டம் மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. அரசுத் துறை சேவைகள் பொது மக்களுக்கு சென்றடைய இந்த குறுந்தகவல் சேவை உதவும். இதன் மூலம் அரசின் ஒவ்வொரு துறைகளும் தகவல் தொடர்பை குறுந்தகவல் நுழைவாயில் மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம். இதன் முதல் கட்டமாக வருவாய் துறை (சான்றிதழ்கள்) மற்றும் சமூக நலம் (திருமண உதவி) உள்ளிட்ட பத்து அரசு சேவைகளை மின் ஆளுமை திட்டத்தின் கீழ் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக **2013–2014** ஆம் ஆண்டின்

பகுதி 2–ஆம் திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**<u>திட்ட தகவல் மேலாண்மை ஒருங்கியம்</u>**

மாநிலத்தில் மின் ஆளுமை திட்ட முயற்சிகளை ஊக்குவிப்பது தகவல் தொழில் நுட்பத் துறையாகும். துறைகளின் மின் ஆளுமை முயற்சிகளில் ஆலோசனைகள் வழங்குதல், சில நேர்வுகளில் நேரடியாக பங்கேற்றல் என இத்துறை ஈடுபடுகிறது. திட்ட மேலாண்மையை திறம்பட செயல்படுத்த துறைகளுக்கிடையிலான பல்வேறு திட்டங்களின் திட்ட தரவுகளை சேகரித்து அவற்றை ஒருங்கிணைத்தல் அவசியமாகும். சிறப்பு திட்டங்களின் செயல்பாட்டினை அரசு நிர்ணயித்தபடி வெளிப்படையாக அளவீடு செய்திட ஒவ்வொரு திட்டத்தின் சேவை வழங்குதலை கண்காணித்திட வேண்டும். இதனை செயல்படுத்த திட்ட தகவல் மேலாண்மை அவசியமாகும். இத்தகைய திட்ட மேலாண்மை, அரசுத் துறைகள் திட்டமிடுதலை எளிதாக்குவது மட்டுமல்லாமல் பகுப்பாய்வு போன்றவற்றிற்கும் பயன்படும். தனிப்பட்ட துறைகளின் சேவை வழங்கும் மென்பொருள் இருப்பின் அவற்றுடன் இத்தகைய திட்ட மேலாண்மை ஒருங்கிணைக்கப்படும். மென்பொருள்



உருவாக்கப்பட்டு மாநில தரவு மையத்தில் தனிப்பட்ட மேகக் கணினியில் நிறுவப்படும். இம்மென்பொருள் பல்வேறு துறைகள் புதிதாக தங்களுக்கான சேவை மென்பொருளை உருவாக்கும் பொழுது எளிதாக ஒருங்கிணைக்கும் வகையில் அமையும். இதற்காக 2013–2014 ஆம் ஆண்டின் பகுதி 2–ஆம் திட்டத்தின் கீழ் ரூ.22 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**முக்கூர் என். சுப்பிரமணியன்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**